# தி இந்து

Vol. 4 No. 66 தமிழால் இணைவோம் RNI No.TNTAM/2013/55769

4 CHENNAI செவ்வாய், மார்ச் 8, 2016




▶▶ செங்கல்பட்டு வித்யாசாகர் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சர்வதேச மகளிர் விழாவின்போது பாடவாரியாக சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

## வித்யாசாகர் கல்லூரியில் சர்வதேச மகளிர் தின விழா

■ சென்னை

செங்கல்பட்டு வித்யா சாகர் மகளிர் கல்லூரியில் சர்வதேச மகளிர் விழா கொண்டாடப்பட்டது.

கல்லூரி முதல்வர் சி.ஷாலினி குமார் வரவேற்றார். நிகழ்ச்சியில் உளவியலாளர் ரேகா சுதர்சன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். அவர் பேசும்போது, "பள்ளியிலிருந்து கல்லூரி வேறுபட்டிருக்கும். எனவே, மாணவிகள் சிந்தித்து செயல்பட வேண்டும். கல்லூரியும், பல்கலைக்கழகமும் உங்கள் உயர்வுக்கு உறுதுணையாக செயல்படுகின்றன. காலத்தை வீணாக்காமல் குறிக்கோளை அடைய வேண்டும். மகிழ்ச்சியான வாழ்க்கையை பெறுவது உங்கள் கையில்தான் உள்ளது" என்றார்.

கல்லூரி தாளாளர் விகாஸ் சுரானா சிறப்பு விருந்தினரை பாராட்டி பேசினார். தொடர்ந்து பாடவாரியாக சிறப்பிடம் பெற்ற மாணவிகளுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. வகுப்பில் முதன்மை பெற்ற 108 மாணவிகளுக்கு 50 சதவீத உதவித் தொகை வழங்கப்பட்டது.